
யார் அந்த
மினி ஸ்பைடர்?
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50/

ற்கு

50/-

வீதம்)

225/

ERS"

ப்பிடலாம்

ர் ஸ்

ாடு.

626 18

275159






ஒருநாள் - பெரும் தொகையை சுமந்து வந்த ஒரு கவச மோட்டார், பாங்க் வாசலில் வந்து நின்றபோது ஏற்கனவே அருகே நின்று கொண்டிருந்த டிரக் ஒன்றிலிருந்து பல்டியடித்து கீழே குதித்தான் ஒரு மர்ம ஆசாமி!!
BANK
முகமூடித் திருடன்... - அவனை சுட்டு வீழ்த்து
4


ஆனால் அந்த மர்ம மனிதன காலை பூமியில் ஊன்றியதும்...
ஹ ஹ்.. ஹ ஹ்.. ஹா! உங்களுக்கு என் அன்பளிப்பு - அதிர்ச்சி அலைகள்! மின்சாரம் பாயும் என் கையுறைகளை தொட்டவர்கள் உடனே சுயவுணர்வு இழந்துவிடுவார்கள் - இதோ.. ஹஹ்.. ஹா!
இனி இவர்களால் தொல்லையிராது.. கவச மோட்டாரை தொட்டேன் என்றால் உள்ளே இருக்கும் மற்ற பாதுகாவலர்களுக்கும் இதே கதிதான்!


மறுகணம் அவனுடைய வார்த்தைகள் செயல் வடிவம் பெற்றன.
பாங்க் உள்ளே இருந்த பாதுகாவலர்கள் வாசலில் நிகழ்ந்த அசம்பாவிதத்தை அறிந்து விரைந்தோடி வந்தனர்.
அதிர்ச்சி அலைகளை ருசி பார்க்க உங்களுக்கும் ஆசை வந்துவிட்டதா?!
சுடுவதைத் தவிர வேறுவழியில்லை!
ஆபத்தான ஆசாமி.. கவச மோட்டார் பாதுகாவலர்களை தனியொரு மனிதனாக வீழ்த்திவிட்டானே!


ஆ ஆ...!
யாயா... யா!
இங்கிருந்தே அதிர்ச்சியலைகள் பீச்சியடிக்க இயலும்!
சர்ர்ர்...
ஆ ஆ...!
பல மைல்களுக்கு அப்பால் நடமாட்டமில்லாத ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்த கறுப்பு காரினுள் சமூக விரோத கும்பலின் தலைவனான டோப்லும் விஞ்ஞானி ஸில்வான்ஸும் இருந்தனர்.
''ஸில்லி...'' உன்னைப் போல் அதீத மூளைபடைத்த விஞ்ஞானியால் மட்டுமே அப்படியொரு அதிர்ச்சி அலைகளையும் அங்கே நடப்பதை இங்கே காணும் படியான டி. வி. அமைப்பையும உருவாக்கித் தரமுடியும்... !
நன்றி... என்னை 'ஸில்லி' என்று அழைப்பதை நிறுத்து - என் பெயர் ஸில்வான்ஸ்!
7



அங்கே பாங்க் வாசலில்-
அதிர்ச்சி அலைகளைப் பாய்ச்சி டிரக்கின் பின் பகுதியில் மறைந்திருந்த ஒரு விநோத அமைப்பை இயக்கினான் முகமூடி மனிதன் !
என் வேலையை எல்லாவழிகளிலும் சுலபமாக்கிவிட்ட விஞ்ஞானி ஸில்வானஸுக்கு நன்றி!


கவச மோட்டார் சுமந்து வந்த அத்தனை பெட்டிகளும் டிரக்கினுள் வந்து சேர கண்ணிமைக்கும் நேர அவகாசம் போதும்.



அந்த சிறு இடைவேளையில் வானில் தோன்றிய காட்சி ஒன்று அந்த மர்ம மனித னின் கவனத்தை ஈர்த்தது.
ஸ்பைடர்..! சே.. எதிர்பாராத இடைஞ்சல்! ஆனாலும் ஸில்வானஸின் கண்டுபிடிப்புகள் கைவசம் இருக்கும் வரை நான் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை !
நான் வசமாக்கிக் கொண்ட பெரும் பணத்தை அபகரிப்பது அவனுடைய நோக்கமாக இருக்கவேண்டும்.,.. ஸ்பைடர் சாதாரண ஆசாமியல்ல - அவனை அழிக்க கூடுதல் வீரியம் கொண்ட அதிர்ச்சியலைகளை நான் பயன்படுத்த வேண்டும்
9


ஷ்ஷ்ஷ்...


ஜ்ஜ்ஜ்...
பாதிப்பு இன்றி தொடர்ந்து முன்னேறி வருகிறானே... அவனுடைய ஹெலிகாரில் மின் அலைகள் ஊடுருவ முடியாத அமைப்பு இருக்கக் கூடும்!


ஸ்பைடரின் ஸ்பெஷல் தயாரிப்பு - உனக்குநான் அளிக்கும் அன்பளிப்பு !



பூ.. என்னை விடுவித்துக்கொள்ள கண்ணிமைக்கும் நேர அவகாசம் போதும் !



தன்னை அவன் விடுவித்துக் கொண்ட அதே வேகத்தில் இடியாய் இறங்கியது அடுத்த தாக்குதல் ....
ஸ்பைடர் குறி வைத்த 'இரை' கைநழுவிப் போனதாக சரித்திரம் கிடையாது தம்பி !



அங்கே காரில் -
நம் திட்டத்திற்கு இடைஞ்சலாக வந்து சேர்ந்திருக்கிறான் ஸ்பைடர்... ''ஸில்லி...''- நீ கொஞ்சமும் அலட்டிக்கொள்ளக் காணோமே
இம்மாதிரி பிரச்சனைகளைச் சமாளிக்க வசதி செய்து கொடுத்திருக்கிறேன். ... அது போகட்டும் - மீண்டும் உன்னிடம் கூறுகிறேன் 'என் பெயர் 'ஸில்லி' இல்லை - ஸில்வானஸ்'



இதோ.. இந்த கையுறைகளின் அரிய சக்தியால் நொடிப் பொழுதில் உன்னை சுயவுணர்வு இழக்கச் செய்ய முடியும் என்றால் - அட... உன்னிடம் எவ்வித பாதிப்பையும் காணோமே !
மின்சாரம் ஊடுருவ முடியாத ஆடைகள் அணிந்திருக்கும் ஸ்பைடரிடம் உன் பாச்சா பலிக்காது, அப்பனே !



இன்னும் நிறைய இருக்கிறது...
கொண்டு வா... மகிழ்ச்சியோடு வரவேற்கக் காத்திருக்கிறேன்
இந்தா...! இந்தக் கை. வெடிகுண்டு உன்னை சிதறடிக்கப் போவது உறுதி!
சிறு பிள்ளைத் தனம்!



என் வசமுள்ள 'ஜெட்' அமைப்பை அறியாத மடையன் - நீயா என்னை வெற்றி கொள்ளப் போகிறாய்? ஹீ ஹீ ! இனி ஸ்பைடரின் தாக்குதலை நீ எப்படி சமாளிக்கிறாய் என்று பரீட்சித்துப்பார்ப்போமா? !
அதை பிறகு வைத்துக் கொள்வோம் - இப்போது இதற்கு பதில் சொல் !



இந்த இடுக்கி உன்னை சக்கையாகப் பிழிந்து விடும்... இதிலிருந்து நீ தப்பவே முடியாது !


அங்கே காரில் -
ஹாஹ்ஹா...! ''ஸில்லி'' - பிரமாதமான முன்னேற்பாடுகள் ! இத்தோடு ஸ்பைடரின் சகாப்தம் முடிந்தது !
என் படைப்புகளை பாராட்டும் உனக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.. ஆனால் நீ என்னை 'ஸில்லி' என்று அழைக்கும்போது எனக்கு எப்படி பற்றிக்கொண்டு வருகிறது தெரியுமா?


ஹஹ்ஹா...ஹா ! குற்றவியல் சக்கரவர்த்தியை தீர்த்துக்கட்டிய பெருமை என்னைச் சேரப்போகிறது !
மரணப் பிடிதான்-சந்தேகமில்லை ! உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்...


[redacted] தனம்து படியத தொடங்கிய அந்தக் கணத்தில் ஸ்பைடர் அவசர அவசரமாக தன் கைக்கடிகாரத்திலிருந்த ஒரு பட்டனை அழுத்தினுன்.


அதன் விளைவாக ஸ்பைடர் வசமிருந்த எதிர் மின் சக்தி இயக்கம் பெற்றது.
ஹெலி கார் கீழே விழுகிறது - விசேட கதிர்கள் இயக்கம் பெற்றுவிட்டதற்கு இது ஓர் அத்தாட்சி !


மின்சாரத்தினுல் இயங்கிக் கொண்டிருந்த 'இடுக்கி ஏன் திடீரென்று செயலிழந்து விட்டது என்று புரியாமல் குழம்பிப் போனுன் முகமூடி ஆசாமி.
இது எப்படி சாத்தியம் ?!!
அவன் மீண்டும் சுதாரித்துக்கொள்ளுமுன் நான் இந்த இடுக்கியின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டாக வேண்டும்'


செய்வதறியாது திகைத்துப் போன முகமூடி ஆசாமி தப்பியோடிவிட முனைந்த போது ஸ்பைடரின் முஷ்டி இடியென அவன் முகத்தில் இறங்கியது.
இந்தா., ஸ்பைடரின் பதிலடி !
ஹா ஆஆ...!



மன சகதியை வாரிவழங்கிக் கொண்டிருக்கும் இந்த அமைப்பை முதலில் அகற்றிவிடவேண்டும்.
அடுத்து வலைத்துப்பாக்கியை இயக்கி ஸ்பைடர் எதிரியை முடக்கிப் போட்டான்.
இன்று, தனியொரு மனிதனாக நான் நிகழ்த்திய கொள்ளை குற்றவியல் சரித்திரத்தில் பெரியதொரு சாதனையாக இடம் பெற்றிருக்கும் - நீ மட்டும் குறுக்கிட்டிராவிடில் !
உன் 'சாதனையை மெச்சி பல ஆண்டுகளுக்கு உனக்கு இலவச உணவும் தங்குமிடமும் கிடைக்க அதோ வந்து கொண்டிருக்கும் காவல் துறையினர் தகுந்த ஏற்பாடு செய்வார்கள்., கவலைப்படாதே !


தூ., நீ எல்லாம் ஒரு விஞ்ஞானி - துப்புக் கெட்ட மூதேவி ! உன் கண்டுபிடிப்புகளை நம்பி காரியத்தில் இறங்கியது என்னுடைய தப்பு... அந்த தப்புக்கு பரிகாரம் - உன்னை நிரந்தரமாக ஒழித்துக்கட்டுவதுதான் ! ஸில்லி !
"ஸில்லி" என்று பட்டப் பெயர் வைத்துக் கூப்பிடாதே என்று ஆயிரம் முறை எச்சரித்தும் உனக்கு புத்திவரவில்லை...



இப்போது என் விஞ்ஞான அறிவை பழித்துப் பேச துணிந்துவிட்ட நீ என்னையே தீர்த்துக் கட்டப் போவதாகவும் மிரட்டுகிருய்... அனைத்துக்கும் ஒரு முடிவுகட்ட -
ஐயோ... வேண்டாம் ! சுடாதே என்னை... !


விட்டிறங்கிய ஸில்வானஸ் மறைத்து வைத்திருந்த ஒரு கருவியை வெளியே எடுத்தான்.
ஸ்பைடரின் வலைத் துப்பாக்கியிலிருந்து வரும் இழைகளைப் போன்ற இந்த இழைகளை இப்படி பின்னி வைத்தால் டோப்ஸை கொலை செய்தது ஸ்பைடர் தான் என்று எல்லோரும் சுலபமாக தீர்மானித்துவிடுவார்கள்
சிலமணி நேர இடைவெளிக்குப் பின் -
என்னை ஏதற்காக இங்கே வரச் சொல்லி தகவல் அனுப்பினார்கள் என்று கொஞ்சமும் யூகிக்க முடியவில்லையே.. கொள்ளைக்காரனை மடக்கி இவர்கள் வசம் ஒப்படைத்ததற்காக எனக்குப் பாராட்டு தெரிவிக்க இருக்குமோ?.. இருக்கலாம்!



ஆனால் வரவேற்பு வேறு விதமாக இருந்தது....
என்ன இதெல்லாம்... ?
சமூக விரோத கும்பலின் தலைவன் டோப்ஸை கொலை செய்த குற்றத்திற்காக உன்னை நான் கைது செய்கிறேன், ஸ்பைடர் !
இங்கே பார்.. டோப்ஸ் கொலை செய்யப்பட்டுக் கிடககும் காரின் மீது உன்னுடைய 'முத்திரை யான' வலைப் பின்னல் இருக்கிறது.
ஆனால் எனக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.


கொஞ்சம் சிந்தித்துப் பார்... டோப்ஸை நான் கொலை செய்திருக்கும் பட்சத்தில் என்னை அடையாளம் காட்டும் வலைப்பின்னலை விட்டுச் செல்லுமளவுக்கு நானென்ன அறிவில்லாதவனா...?
அப்படி நாங்கள் எண்ணி ஏமாற வேண்டும் என்பது உன் திட்டமாக இருக்கலாமல்லவா?- நீ குற்றவாளியா ஒன்றுமறியாதவனா என்பதை நீதிபதி தீர்மானிப்பார்கள்.


இதற்குள் கைவிலங்கை கழற்றிக் கொண்டுவிட்ட ஸ்பைடர் போலீஸ் அதிகாரி மீது மின்னலாய்ப் பாய்ந்தான்.
நீதிபதியும் உன்னைப் போல் நினைத்துவிட்டார் என்றால் நான் ஜெயிலுக்கு அல்லவா போகநேரிடும் !
தப்பியோடுவதில் சமர்த்தன் நீ என்கிற உண்மையை மறந்து விட்டேன்.


உதவி... உதவி... கதவை உடைத்துக் கொண்டு உள்ளே ஓடி வாருங்கள்.. ஸ்பைடர் தப்பிக்க முயற்சிக்கிறான்.
தேவையான முன்னேற்பாடுகள் செய்து கொண்டு தப்பியோட கொஞ்ச அவகாசம் தேவை.. அதுவரை யாரும் உள்ளே வராமல் தடுத்து நிறுத்தியாக வேண்டும் !


தேவையான ஐந்து வினாடி அவகாசம் கிடைத்துவிட்டது.. போதும் !
அதோ ஓடுகிறான் - பிடியுங்கள்... ஸ்பைடரை தடுத்து நிறுத்துகிறவர்களுக்கு பதவி உயர்வு நிச்சயம்...



இனி ஸ்பைடரை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது !
டமால்!
26




கைக்கடிகாரத்திலுள்ள விசையை இயக்கி நான் வரவழைத்த சிறப்பு வாகனம் இதோ - போலீ ஸாரின் துப்பாக்கி தோட்டா இனி என்னை தொடமுடியாது.
நிரபராதி தப்பியோடவேண்டிய அவசியமில்லைதான்... ஆனால் நான் குற்றவாளி இல்லை என்பதை நிருபிக்க ஆதாரம் கைக்கு கிடைக்கும்வரை இவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது.
தப்பியோடிவிட்டானே...


அன்று பிற் பகலில் காவல் துறை அலுவலகத்தில் -
காவல்துறை அதிகாரி திரு சாண்டர்ஸை அறிமுகம் செய்கிறேன்.
கொலைக்குற்றம் சம்பந்தமாக தேடப்பட்டு வரும் இந்த நபரை பார்க்க நேரிட்டவர்கள் உடனடியாக எங்களுக்கு தகவல் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.


ஸ்பைடரின் இருப்பிடத்தில் -
அபாண்டமாக என்மீது சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றத்திலிருந்து விடுபட உடனே ஏதாவது நடவடிக்கையில் இறங்கியாக வேண்டும்.


சில நிமிடங்களுக்குப்பின் ஹெலி-கார் பயணத்தை தொடங்கியது...
எங்கே செல்கிறோம் பாஸ் ?
கொலை நடந்த இடத்துக்கு.


செய்தித்தாள்களில் வெளிவந்த விபரங்களின்படி கொலை நிகழ்ந்த இடம் இதுதான்.. இந்த இடத்தை துப்பறியும் ஆற்றலோடு துருவி ஆராய்ந்தால்..
உண்மையான கொலையாளியை கண்டுபிடிக்க நமக்கு உதவும் தடையம் ஏதேனும் கிடைக்கலாம்.
அபாரமான யோசனை !
டோப்ஸின் காரை போர்த்தியிருந்த வலைப் பின்னலின் ஒரு துணுக்கு இங்கே கிடக்கிறது.- இதை உங்கள் பாக்கெட்டினுள் போட்டுக் கொள்ளுங்கள் புரபஸர் !
நம்முடைய ஆய்வுக்கூடத்தில் இதை சோதித்துப் பார்த்துவிடலாம்.


போலீஸ் ஹெலிகாப்டர்கள் வருகின்றன !
ஹெலி காருக்கு ஓடுங்கள்..



ஹெலிகாப்டர்களிலிருந்து வீசப்பட்ட கொக்கிகள் ஹெலிகாரை உயரே தூக்கிச் செல்கின்றன !
போலீஸாரிடமிருந்து தப்ப வேறு பல உபாயங்கள் நம்மிடம் இருக்கின்றன.


நண்பர்களை கைலாகு கொடுத்து அணைத்தபடி தன்வசமுள்ள ஜெட் அமைப்பை இயக்குகிறான் ஸ்பைடர்.



ஆனால் ஹெலிகாப்டர் ஒன்றிலிருந்து சீறிவந்த துப்பாக்கி தோட்டா ஸ்பைடரின் ஜெட் அமைப்பை கிழித்தது.
ஜெட் அமைப்பு கெட்டுவிட்டது.. நாம் கீழே விழப்போகிறோம்.
ஊஊய்ய்...ய் !
ஊப்ப்...ப் !
பொத்!


வாருங்கள்.. காட்டுக்குள்ளே ஓடி ஒளிந்து தப்பிக்க முயற்சிப்போம்.
அதற்கும் வழியில்லை.. அங்கே பாருங்கள் - ஏகப்பட்ட கார்கள் நம்மை குறிவைத்து விரைந்து வருவதை !
வகையாக மாட்டிக் கொண்டு விட்டோம்,
34


முதன்மையாக வந்து கொண்டிருந்த காரில் காவல்துறை உயர் அதிகாரி சாண்டர்ஸ் இருந்தார்.
குற்றவாளி கொலை நடந்த இடத்திற்கு திரும்பவும் வரக்கூடும் என்ற என் யூகம் சரியாகிவிட்டது.
அபாரமான மூளை ஸார் உங்களுக்கு !! பிரமோஷன் நிச்சயம் தான் !


கார்கள் ஸ்பைடர் குழுவை சுற்றி வளைத்த வேளையில் பெரிய மரப் பொந்தினுள்ளிருந்து மர்மக் கை ஒன்று ஒரு வெடிகுண்டை போலீஸாரை நோக்கி வீசி எறிந்தது.


மறுகணம் திரளான புகை மண்டலம் போலீஸாருக்கும் ஸ்பைடர் குழுவுக்கு மிடையே உருப்பெற்றது.
டமால்
எங்கிருந்து வந்தது !
எனக்கும் அதே சந்தேகம்தான் ஆர்டினி !
வாயு துப்பாக்கியை இயக்கி புகை மண்டலத்தை எழுப்பலாம் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது இது நிகழ்ந்து விட்டது... ஆனால் வெறும் புகைமண்டலம் மட்டும் நாம் தப்பியோட வகை செய்யாது.
புகைத் திரளினூடே மரப்பொந்திலிருந்து வெளிப்பட்ட உருவம் ஸ்பைடரிடம் எதையோ நீட்டியது.
யார் நீ ?
கேள்வி எதும் கேட்காதே.. இந்தா என்னுடைய ஜெட் அமைப்பு.. தப்பியோட உனக்குப் பயன்படும் - தாமதிக்காதே !
36



புகை மண்டலத்தை ஊடுருவி காவல் துறையினர் முன்னேறி வந்தனர்.
ஸ்பைடர் இங்கேதான் இருப்பான் - தேடிக் கண்டுபிடியுங்கள் !
ஹெலிகார் அல்லது ஜெட் அமைப்பு உதவியின்றி அவனால் தப்பியோடிவிட இயலாது.
POLICE


புது ஜெட் அமைப்பின் உதவியோடு தன் நண்பர்களையும் உடனழைத்துக் கொண்டு அங்கிருந்து விலகிச் சென்றான் ஸ்பைடர்.
தருணத்தில் உதவிய அந்த ஆசாமி யாராக இருக்கும்! - யாராக இருந்தாலும் அவனுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி உரித்தாகட்டும்!
தனக்கு உதவிய நபர் நண்பனல்ல... எதிரி - என்கிற உண்மை ஸ்பைடருக்கு தெரியாது அந்த இளைஞன் மீண்டும் மரப் பொந்துக்குள் பதுங்கிக் கொண்டு விட்டான். புகைமண்டலம் விலகி அனைத்தும் தெளிவாகியபோது -
ஸ்பைடர் தப்பிவிட்டான்... ஹூம்.. நம்மிடம் அகப்படாமலா போய்விடுவான் - அடுத்த முறை பார்த்துக் கொள்ளலாம்!
ஸ்பைடர் அகப்பட்டுக் கொள்ளப்போவது உங்களிடமல்ல - என்னிடம்! அவன் உங்களிடமிருந்து தப்பிக்க நான் உதவியதன் நோக்கமே நான் அவனை என் கைகளாலேயே பழி தீர்த்துக் கொல்ல வேண்டும் என்ற ஆவலினால் தான்!


கொலை நடந்த இடத்தில் கிடந்த வலை இழை துணுக்கை ஆராய்ந்தார் புரபஸர் பெல்ஹாம்.
உங்களுடைய வலைத் துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் இழைகளுக்கும் இந்த இழைக்கும் மிக மிக நுண்ணிய வேறுபாடு உள்ளது.. இந்த உண்மையை போலீஸார் ஏற்றுக் கொள்வார்கள் என்றால்..
கொலையை செய்துவிட்டு பழியை உங்கள் மீது சுமத்த துணிந்த நபர் யாராக இருக்கும் பாஸ்?
எனக்கு எதிரிகளுக்கா பஞ்சம் - அதில் யாரோ ஒருத்தன்! இந்த விஷமத்திற்கு சீக்கிரமே என்னிடம் சரியாக வாங்கிக்கட்டிக் கொள்ளப் போகிறான்.


சரியான அந்த சமயத்தில் எனக்கு உதவிய அந்த நபர் யாராக இருக்கும்? அந்த நபரை நான் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமா?
உதவிய நபர் - "மினி-ஸ்பைடர்" என்று தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொண்ட இளைஞன் - அந்த வேலையில் ஜெட் அமைப்பின் உதவியோடு விண்ணில் பறந்து போய்க் கொண்டிருந்தான்.
ஸ்பைடரை என் கையால் அழித்தால்தான் என் ஆத்திரம் தீரும்


ஹெலிகார் பயணத்தைத் தொடங்கியது.
ஸ்பைடரை சீண்டுவது எத்தனை ஆபத்தானது என்பதை அறியாத மூடன் எவனோதான் அந்தக்கொலையை செய்துவிட்டுப் பழியை என்மீது போடத் துணிந்திருக்கவேண்டும்.
அவனுக்கு என்னுடைய மனப்பூர்வமான அனுதாபங்கள் !
கோட்டை போன்றதொரு பெரிய கட்டிடத்தை ஹெலிகார் நெருங்கியபோது-
ஊப்... மயிரிழையில் தப்பினோம்.. அந்த பீரங்கியின் இலக்குக்கு ஆளாகியிருந்தால் இன்னேரம் எல்லோரும் எமலோகம் போயிருப்போம்.



பிறிதோரிடத்தில் - டோப்ஸை கொலை செய்த ஸில்வானஸ் தன் புது கண்டுபிடிப்பான கதிர்வீச்சுப்-புரஜெக்டரை முதன்முறையாக பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான்.
ஹே.. ''ஸில்லி'' ரேடியோவில் சற்று முன் ஒலிபரப்பான செய்தியின்படி போலீஸாரின் முழுமுயற்சியும் ஸ்பைடரின்பால் திசைதிரும்பியிருப்பதாக தெரிகிறது.
என்னை 'ஸில்லி' என்று கூப்பிடாதே.. என் பெயர் ஸில்வானஸ்! இது கவனமாக செய்யப்படவேண்டிய காரியம்.. 'லொடலொட' என்று பேசி என் கவனத்தை திசைதிருப்பாதே!


ஹய்... பிரமாதம் ! ஜிம்மி கொடிப் பொழுதில் ராட்சஸத்தனமாக வளர்ந்து விட்டானே !
பாதியளவு கதிர்வீச்சுதான் பயன்படுத்தியிருக்கிறேன்.. முழு அளவு செலுத்தியதும் அவனுடைய உயரம் இதைப்போல் இரட்டிப்பு ஆவதோடு உடம்பும் உறுதியான எஃகுப் போலாகிவிடும்.
ஹாஹ்ஹா... என் பலம் ஆயிரம் மடங்காகிவிட்டதாக உணருகிறேன் !
உன் பணி என்ன என்ற விபரம் ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிறதல்லவா ?.. புறப்படு ஜிம்மி - உன்னை எதிர்க்கவோ தடுத்து நிறுத்தவோ யாராலும் முடியாது.
43




சிலையை அகற்றும் முயற்சி நடந்து கொண்டிருந்தது.
ஸ்பைடர் தீரன்தான்.. ஆனால் சமூகத்துக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடும் அவன் சிலை இங்கே இருப்பது இந்த இடத்தின் பெருமைக்கு ஓர் இழுக்கு.. ம் சீக்கிரம் ஆகட்டும் !
இன்னும் சிறிது நேரத்தில் சிலை அகற்றப்பட்டு விடும் ஸார் !
நான் எறிந்த கை வெடிகுண்டு சரியாக இலக்கைத் தாக்கிவிட்டது. இந்த விஷமத்தை செய்தது ஸ்பைடர் என்றுதான் கீழேயுள்ள காவல்துறை அதிகாரிகள் நினைப்பார்கள் !
"மினி- ஸ்பைடர்" அங்கே வந்து சேர்ந்தான்...
ஸ்பைடர்.. ! அவனுடைய சிலையை நாம் அகற்றுவதையறிந்து கோபமடைந்து தாக்குகிறான் !


அங்கே... ஸ்பைடரின் இருப்பிடத்தில்-
சிற்றலை வரிசையில் ஒலிபரப்பாகும் போலீஸ் செய்தி எதையோ கம்ப்யூட்டர் பதிவு செய்திருப்பதாக தெரிகிறது பாஸ்..!
ப்ளே-பேக் சுவிட்சைப் போடு... கேட்போம்!


சுவிட்சை போட்டதும் -
அனைத்து ரோந்து கார்களுக்கும் - கிரீன் பார்க்கிலிருந்த வீரர்களின் சிலைகளை ஸ்பைடர் குண்டு வீசி நொறுக்கிப் போட்டுவிட்டான்..
மறுபடியும் என் மீது வீண்பழி வந்து சேர்ந்திருக்கிறது.. ஓடி வாருங்கள் தோழர்களே - நிலைமையை இப்படியே நீடிக்க விடக்கூடாது.


மறு நிமிடம் - மூவரும் ஹெலிகார்கள் நிறுத்தப்பட்டிருந்த தளத்தைச் சென்றடைந்தனர்.
எங்கே போகிறோம் பாஸ் ?
போகப் போக நீயே தெரிந்து கொள்வாய்.. ம் ஏறு சீக்கிரம் !


க்ராய் நகரின் இன்னொரு பகுதியில் ராட்சஸ வடிவம் கொண்ட ஜிம்மி வெறித்தனமாக சிரித்தபடி சாலையில் ஓடிக் கொண்டிருந்தான். எங்கும் பீதி.. குழப்பம் தலைவிரித்தாடியது.
துப்பாக்கிக் குண்டுகள் கூட அவனை துளைக்கவில்லையே
ஹே.. பொடிப்பசங்களே.. வழியில் நில்லாது விலகி ஓடிப் போங்கள் !
ஹெலி-காரின் டி. வி. திரையில் -
என்னைப் போலவே உடையணிந்துள்ள அந்த இளைஞன் வசம் ஜெட் அமைப்பும் காணப்படுகிறது.. போலீஸாரிடமிருந்து நாம் தப்பிக்க ஜெட் அமைப்பை கொடுத்து உதவியவன் இவனாகத் தானிருக்கவேண்டும். இவனுடைய விஷமங்களுக்கான பழியனைத்தும் என் மீது விழுந்து கொண்டு வருகிறது - அந்த நிலையை உடனே நிறுத்தியாக வேண்டும் !


எச்சரிக்கை செய்தி ஒன்றை கேட்க நேரிட்ட பெல்ஹாம் டி. வி. அமைப்பில் ஒரு விசையைத் திருக திரையில் இரு வேறு காட்சிகள் ஒரு சேர தோன்றின.
ஆள் மாருட்டம் செய்யும் எதிரி ஒரு பக்கம்.. க்ராய் நகரை அழிக்க உறுதி பூண்டு அலையும் ராட்சஸ உருவம் இன்னொரு பக்கம் - முதலில் அந்த ராட்சஸனை ஒழித்து நகரை காப்பாற்றியாக வேண்டும்.. இளைஞனை பிறகு கவனித்துக் கொள்ளலாம் !
அதுதான் சரியான காரியமாக இருக்கும்.



சில வினாடிகளுக்குப் பின் ஹெலி கார் ஜிம்மியின் தலைக்கு மேலே பறந்து கொண்டிருந்தது.
ஹே.. ராட்சஸ மடையா ஸ்பைடர் எச்சரிக்கிறேன்.. சரணடைந்துவிடு - இல்லையேல் அழிவு உறுதி !
என்னோடு மோத துணியும் நீதான் அழிந்து போவாய்.. வீணாக அலட்டிக் கொள்ளாமல் விலகிப் போய் விடு !


ஒரே வீச்சில் ஸ்பைடர் குழுவை ஒட்டு மொத்தமாக அழித்துவிடுவேன்.


இவனை உருவாக்கி அனுப்பி வைத்தது யார் என்று தெரியவில்லை.
நிஜமாகவே மனிதன்தானா அல்லது ராட்சஸ இயந்திர அமைப்பா என்று விளங்கவில்லை.


தன் வீச்சிலிருந்து ஹெலிகார் விலகி விலகி தப்பியதால் ஆத்திரமடைந்த ஜிம்மி கையிலிருந்த கோபுரத்தை வீசி எறிந்தான்!
என்னிடமா கண்ணாமூச்சி ஆடுகிறீர்கள்.. உங்களை -


ஸில்வானஸின் பாசறையில் -
"ஸில்லி" ஜிம்மிக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா..? பல லட்சம் டாலர் பெறுமானமுள்ள பொக்கிஷங்களை கொண்ட அந்த கோபுரத்தை தூர் எறிந்துவிட்டானே
இன்னொரு முறை 'ஸில்லி' என்று என்னை அழைத்தாயோ விபரீத விளைவுக்கு நீ ஆளாவாய் - எச்சரிக்கிறேன் !
இந்தக் கோபுரம் போனால் என்ன.. ஸ்பைடரை தீர்த்துக்கட்டி விட்டால் போட்டியின்றி கொள்ளைகள் நடத்தி கோடி கோடியாக சம்பாதிக்கலாமே!


கோபுரம் வேகமாக தங்களை நோக்கி நெருங்கி வந்தபோது ஸ்பைடர் ஹெலி-காரிலிருந்த விசை ஒன்றை இயக்கலானான்.
ஹா..ஹா.. புதிய கண்டுபிடிப்பான 'புவிசர்ப்புக் கட்டுப்பாடு விசை' கோபுரத்தை அந்தரத்தில் நிற்கச் செய்துவிட்டது.


இந்த விசையை கவனமாக இயக்கி கோபுரத்தை மெள்ள தரையிறக்க இயலும்!


எங்கிருந்து அது பிடுங்கி எடுக்கப்பட்டதோ அதே இடத்தில் மீண்டும் அதே பொலிவுடன் நிமிர்ந்து நிற்கிறது..,


அதே வேளையில் போலி ஸ்பைடர், ஸ்பைடரின் இருப்பிடத்தினுள் திருட்டுத்தனமாக நுழைய முயன்று கொண்டிருந்தான்.
ஸ்பைடரைப் போலவே உடுப்புகளும் ஜெட் அமைப்பும் என்வசம் உள்ளன.. இப்பொழுது ஹெலி-கார் ஒன்று தான் தேவை!


சில நிமிடங்களுக்குப் பின் ஸ்பைடரின் இருப்பிடத்திலிருந்த பல ஹெலிகார்களில் ஒன்றை கிளப்பிக் கொண்டு வெளியேறினான் மினி - ஸ்பைடர்.
இந்த ஹெலிகாரும் என் வசம் வந்தபின் என் பலம் பன்மடங்காகிவிட்டது.
ஸ்பைடர் மீது பகைமையை வளர்த்துக்கொண்டு அவனை அழித்தே தீருவது என்று இந்த இளைஞன் கங்கணம் பூண்டு அலையக் காரணம் என்ன ?


இதற்கிடையே ஜிம்மியை நோக்கி வீரியம் மிக்க வெடிகுண்டை வீசி எறிந்தான் ஸ்பைடர்.
ஆச்சரியமாக இருக்கிறதே - அவனுக்கு எந்த பாதகமும் நேரவில்லையே


ஜிம்மி ஹெலிகாரை குறிவைத்து கராத்தே வெட்டு ஒன்று வைத்தான்.


ஹெலிகாரிலிருந்த மூவரும் பூமியை நோக்கி விழத்தொடங்கினர்.
ஜெட் அமைப்பை இயக்கி பெல்ஹாமும் ஆர்டினியும் தரையை தொடுமுன் பற்றி நிறுத்தியாக வேண்டும்


மயிரிழையில் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.
இன்றோடு ஒழிந்தேன் என்றுதான் நினைத்தேன்.. நன்றி பாஸ்!
மூவரும் தரையை தொட்டபோது -
நிலைமை எத்தனை மோசமாகிவிட்டாலும் எங்களை காப்பாற்றுவதை முதல் கடமையாக வைத்துக்கொண்டிருக்கும் உனக்கு நன்றி ஸ்பைடர்!
விடாதே.. பிடி அவர்களை!


டோப்லை கொலை செய்த குற்றத்திற்காக உன்னை கைது செய்கிறேன்., ஸ்பைடர் !
அறிவில்லாத பதர்களே . அந்தக் கொலைக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.. என்னைப் போல் வேஷமிட்டுக்கொண்டு ஆன் மாருட்டம் செய்யும் இளைஞனின் கைவரிசை அது !
இதை எல்லாம் கோர்ட்டில் சொல்..!
58


நம் எல்லோரையும் ஒட்டு மொத்தமாக யமலோகம் அனுப்ப அதோ வந்துவிட்டான் சண்டாளன்... என்னை விடுவித்து விட்டு அப்பால் விலகிச் செல்லுங்கள். அந்த சைத்தானோடு மோதி அழிக்க என்னால்தான் முடியும்.
துப்பாக்கிகள் பயனற்றுப் போன நிலையில் உன் பேச்சைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை எங்களுக்கு...!
அந்த அளவிற்கு,



என்னை எதிர்க்கத் துணிந்த உன் அசட்டுத்தனத்தை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது... என்னை வெல்ல யாராலும் முடியாது..
ஸ்பைடரைத் தவிர - என்று திருத்திக் கொள்.



புரபஸர் பெல்ஹாமின் புதிய கண்டுபிடிப்பான கன்ஸீலியம் வாயுவின் செயல்திறனை இப்போது சோதித்தறியப் போகிறேன்.
ஹா ஆ ஆ...!
இயற்கைக்கு முரணான மாற்றம் பெற்ற எதையும் பழையநிலைக்கு கொண்டுவந்துவிடும் ஆற்றல் பெற்ற வாயு இது.


கன்ஸ்லியம் வாயுவினால் சாதாரண மனித உடலாக மாறி விட்ட போதிலும் என் ராட்சஸத் தன்மையும், வீரியமும் கொஞ்சமும் குறையவில்லை... கொசுவை நசுக்குவதுபோல் உன்னை நொடியில் தீர்த்துக்கட்டுகிறேன் பார்...
வாயுவின் செயல்திறன் இன்னமும் முற்றுப்பெறவில்லை என்பதை அறியாமல் பிதற்றுகிறாய்


கன்ஸ்லியம் வாயுவின் பெருமை சரித்திரத்தில் இடம் பெறப் போவது உறுதி !
ஹா...ஆ ! ஐயோ... கண்ணிமைக்கும் நேரத்தில் மறுபடியும் சுருங்கி விட்டானே !


இனிப் பயமில்லை.. நானே போய் அவன் தாடையில் ஒரு குத்துவிட்டால் என்ன என்று நினைக்கிறேன்..
வீணாக அலட்டிக் கொள்ளாமல் சும்மா இரு.. உடம்புக்கு ஆகாது... !


ஜிம்மி பயந்து ஓடத் தொடங்கினான்.. ஸ்பைடர் விடுவதாக இல்லை.
இப்படியெல்லாம் ஓடி தப்பமுடியாது தம்பி..
எல்லாம் அந்த ஸில்வானஸ் மடையனால் வந்த வினை.. உதவாக்கரைப் பயல் !


ஒரு வெட்டுதானே வெட்டினேன்.. அதற்கே இத்தனை கரணம் அடிக்கிறாயே.. மிச்சத்தை எல்லாம் எப்படி தாங்கப் போகிறாயோ தெரியவில்லை.
ஊப்..!



ஐயோ.. அப்பா !


இனி அவனை கைது செய்து இழுத்துக்கொண்டு போகும் பொறுப்பு உங்களுடையது.
இடுப்பு பெல்ட்டினுல் ஒரு விளாசு விளாசினுல்தான் எனக்கு ஆத்திரம் அடங்கும்! சே..
கராத்தே அடி வைத்து நம் ஹெலி காரை இரண்டாக்கிய அயோக்கிய ராஸ்கல்!


ஸில்வானஸின் பாசறையில் - நடந்தவைகளை டி. வி. திரையில் பார்த்துக்கொண்டிருந்த ஸில்வானஸின் முகம் இறுகிப் போனது.. ஆத்திரத்தோடு அருகேயிருந்த விசையை இழுத்தான்.
ஹூம்.. அந்த மடையன் அவர்கள் கையில் அகப்பட்டு நம் இரகசியம் எதையாவது உளறித் தொலைக்குமுன் அங்கிருந்து அவனை உடனே அப்புறப்படுத்தியாக வேண்டும்.
65



திடீரென்று அங்கே உருவான குருவளியைக் கண்ணுற்ற ஸ்பைடர் குழுவும் காவல்துறை அதிகாரிகளும் திகைத்துப் போனார்கள்.
அவன் குருவளியின் மையத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டான்...
நொடிப்பொழுது தாமதித்திருந்தால் அவர்களோடு கைதியாகிப் போயிருப்பேன்.


ஜிம்மியை அச்சாகக் கொண்டு அதிவேகமாக சுழன்றடித்த காற்றுக் கோளத்தை ஊடுருவ முயன்றவர்கள் பின்னுக்குத்தள்ளப்பட்டார்கள்.
அவனை நெருங்க முடியவில்லையே !
ஸில்வானஸ் உண்மையிலேயே அதிமேதாவிதான்.. இப்போது என்னை ஒரு பயல் தொட்டுவிட முடியாது..



அங்கே ஸில்வானஸின் இடத்தில் -
ஜிம்மியை அப்படியே அலாக்காக தூக்கி இங்கே கொண்டு வந்து சேர்த்துவிடும் அந்தச் சூறாவளி !



ஜிம்மி மாயமாக மறைந்ததும் போலீஸாரின் கவனம் ஸ்பைடர் குழுவினரின் மேல் திரும்பியது.. ஆனால் -
அந்த ராட்சஸனிடமிருந்து காப்பாற்றியதற்கு அவர்கள் நமக்கு காட்டும் நன்றியை பார்த்தீர்களா ?
சென்று வருகிறோம்.. தோழர்களே !
பாவம்.. சோதனைக்கு மேல் சோதனையாக வந்துவிட்ட குழப்பத்தில் அவர்கள் தடுமாறிப் போயிருக்கிறார்கள்.. ஆர்டினி!
குழப்பம் என்றால்.. ஒருவனை ஒருவன் மாற்றி சுட்டுக்கொண்டு சாகட்டுமே., குறிவைக்க நாம்தானா அகப்பட்டோம் !


போலீஸாரின் பார்வையிலிருந்து மறையும் தொலைவுக்கு அவர்கள வந்துவிட்டபோது புதியதொரு தொல்லை எதிர்ப்பட்டது.
வேறொரு-ஹெலிகார் !.. அதில் இருக்கும் நபர் - ஆள் மாறாட்டம் செய்யும் அந்த இளைஞனாகத்தானிருக்கக்கூடும்!
டோப்ஸை கொலை செய்தது இவனாக இருக்குமோ !
திருடி எடுத்துவரப்பட்ட ஹெலி காரினுள்ளே
இதோ கண்ணெதிரே வருகிறான் என் பரம எதிரி.. வஞ்சகம் தீர்த்துக்கொள்ள சரியான சந்தர்ப்பம்.. நேருக்குநேர் மோதிப் பார்த்துவிட வேண்டியதுதான் !



ஸ்பைடர்.. நான் உன்னை வெறுக்கிறேன்.. உன்னை அழிக்க சபதம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.
என் மீது பகைமையை வளர்த்துக் கொண்டு இப்படி ஆத்திரத்தோடு அவன் கத்த காரணம் என்னவாக இருக்கும்?


ஸ்பைடர் ஹெலிகாரை நெருங்கிய போது-
ஹெலி! காரின் கால்களை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் !
பிடியை விட்டீர்களோ... தொலைந்தீர்கள்.
புரிகிறது பாஸ்.. நன்றாகவே புரிகிறது !



வேகமாக சுழற்றிக் கரணம் அடிக்கச் செய்தான்.
இதோ உங்களை கீழே விழ வைக்கிறேன் பாருங்கள்.. !
விரைந்து ஏதாவது உபாயம் செய்தாக வேண்டும்.


வலைத் துப்பாக்கியின் உதவியால் இப்போது உங்களை ஹெலி காரோடு இறுகப் பிணைத்துவிடப் போகிறேன்.
நன்றி ஸ்பைடர். நீங்களும் இதே போல் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.


தோழர்களுக்கு பாதுகாப்பான
ஏற்பாட்டை செய்து முடித்ததும்
எதிரியின் மீது கவனத்தை
திருப்பினான் ஸ்பைடர்.
என் கைக் கடிகாரத்திலுள்ள
ஒரு பட்டனை அழுத்தி தொலை
விசை இயக்குமுறையில் சில
அற்புதங்களை நிகழ்த்தி எதிரியை
திணறடிக்கப் போகிறேன்.
மறுகணம்- ஹெலி காரின் விசிறி
தனியாகப் பிய்த்துக் கொண்டுவிட்டது.
ஹாஹா..ஹா ! பயல்
நிச்சயம் மிரண்டு போயிருப்பான்..
ஆழம் தெரியாமல் காலைவிட்டுவிட்ட
தன் அசட்டுத்தனத்துக்காக
வருந்துவான்.


ஸ்பைட்ரைப பற்றி இன்னமும் சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதற்கு இவன் ஒரு சான்று.. ஹூம் இன்றைக்குச் சரியாக பாடம் கற்றுக் கொண்டு விடுவான் பொடியன் !


ஆனால் ''மினி-ஸ்பைடர் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை.
காற்றாடி போனாலென்ன.. ஜெட் அமைப்பு இருக்கவே இருக்கிறது !


ஹெலிகாரின் ஜெட் அமைப்பை இயக்கியதும் கீழே விழத் தொடங்கியிருந்த ஹெலிகார் மீண்டும் மேலேறி விரைந்து பயணத்தை தொடர்ந்து -
பயல்... நான் நினைததைவிட சமர்த்தனாக இருக்கிறானே!


கட்டப்பட்டுக் கொண்டிருந்த உயர்ந்த கட்டிடம் ஒன்றை ஹெலி கார் சமீபித்த போது அதனுள்ளேயிருந்த இளைஞன் வெளியே பாய்ந்தான்.
முட்டாள்களே! விடைபெறுகிறேன் உங்களிடமிருந்து ! ஹெலிகார் அந்தக் கட்டிடத்தின் மீது மோதப் போகிறது... பின்னர் உங்கள் உடம்பிலுள்ள ஒரு எலும்பு கூட மிஞ்சப் போவதில்லை!


மின்னல் வேகத்தில் ஸ்பைடர் தன் அசுர பலத்தை பிரயோகித்து, எஃகுப் போன்ற நூலிழைகளை தகர்த்தெறிந்தான்..
அப்பாடி !
மறுகணம் - ஸ்பைடர் விரைந்து மேலே ஏறினன்.
ஹெலி கார் போய் கட்டிடத்தின்மீது மோதி நொறுங்குமுன் அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்
76


கட்டுப்பாட்டு அறையினுள் நுழைந்த ஸ்பைடர் ஹெலிகாரை கட்டிடத்தின் மீது பத்திரமாக இறங்கச் செய்தபின் ஜெட் அமைப்பின் உதவி கொண்டு "மினி-ஸ்பைடரை" நோக்கிப் பாய்ந்தான்.
குற்றவியல் சக்கரவர்த்தியிடம் வாலாட்டிப்பார்க்கத் துணிந்த உன் சிறுபிள்ளைத்தனத்துக்காக வருந்த வேண்டிய தருணம் நெருங்கிவிட்டது தம்பி!
என் ஆற்றலை பழித்துப் பேசிய உன் வாயைக் கிழிக்காமல் விடப்போவதில்லை நான்.
77



தற்பெருமை பேசித் திரியும் உனக்கு நல்லதொரு பாடம் கற்பிக்கவே கிளம்பி வந்திருக்கிறேன் நான்.. இதுதான் நீ பங்கேற்கும் கடைசி மோதலாக இருக்கும்.
உன்னை அழிக்க திட்டமிட்டு அதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்து திட்டத்தை செயலாக்கும் இந்தக் கணத்துக்காகத்தான் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தேன் !



இருவரும் ஒருவரையொருவர் நெருங்கிய போது -
எங்கள் தலைவரோடு நீ மோதுவது இருக்கட்டும்.. முதலில் இந்த துப்பாக்கிக்கு பதில் சொல்லுடா பொடியா...



அவர்கள் இருவரும் தொடர்ந்து இடைஞ்சல் செய்யக்கூடும் ஆகவே -


வாயுத் துப்பாக்கியை இயக்கினான் "மினி -ஸ்பைடர்"
இனி நாம் ஸ்பைடருக்கு உதவ வாய்ப்பில்லை!
என்னால் நகர முடியவில்லையே !


இதற்கிடையே -
இந்த காலிப் பெட்டிகள் சரிகின்றனவே..
எங்களை முடக்கி வைத்திருக்கும் வாயுவின் வேகம் குறைய வெகு நேரம் பிடிக்கும்; அதுவரை சிலைகளைப் போல் செயலற்று நிற்பதைத் தவிர வேறுவழியில்லை.
இந்த ஸ்பைடர் மடையனோடு சேர்ந்திருந்தால் எந்த நேரமும் செத்துப் பிழைக்க வேண்டியிருக்கிறது இம்முறை நான் பழைய நிலைக்கு திரும்பியதும் இவனிடமிருந்து கழற்றிக் கொண்டு எங்காவது ஓடிப் போய்விடப்போகிறேன்?
81


துப்பாக்கியை பயன்
படுத்த வேண்டும்.


மறுகணம் ஸ்பைடரின் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய சக்தியலைகள் காலிப் பெட்டிகளை அப்பால் விரட்டியடித்தன.
இனி அந்தப் பொடியனை கவனிக்கலாம்.


''மினி-ஸ்பைடர்'' கண்ணில் தென்படவேயில்லை.
எங்கே போயிருப்பான்?
தாக்குதலை முதலில் எவன் தொடங்குகின்றானோ அவனுக்குத் தான் வெற்றி வாய்ப்பு அதிகம் என்பது பாடம்!


ஹா ஹ..ஹா ! உன் துப்பாக்கியின் உதவியை இழந்து விட்டாயா.. பலே. பலே !
அடேய்.. !
தார் வாளியினுள் ஒரு துப்பாக்கி விழுந்துவிடவே தன்வசமிருந்த மற்றெரு துப்பாக்கியை ஸ்பைடர் எடுக்க யத்தனித்தான்..
துஷ்டனே.. இரண்டாவது துப்பாக்கியையும் விழச் செய்துவிட்டாயே உன்னை -
என்னடா இது.. ஒரு சின்னப் பையன் இப்படி வருத்தஎடுக்கிறனே என்று கொதித்து போகிறதா உன் மனம் !



இரண்டாவது துப்பாக்கியும் தார் வாளிக்குள் விழுந்துவிட்டபின் தப்பியோட முயற்சிப்பதில் பயனில்லை.. பேசாமல் சரணடைந்து விடு.
இள ரத்தம் துள்ளுகிறாய்.. என் கால் தூசு பெறமாட்டாய் நீ.. இந்த உண்மையை போகப் போக தெரிந்து கொள்வாய் !


கதிர் அலைகளைப் பாய்ச்சி உன் பின்னாலிருக்கும் புல்டோஸரில் உன் உருவத்தை அப்படியே வரையட்டுமா ?
வீணாக அலட்டிக் கொள்கிறாய்.. விபரீதத்தை விலை கொடுத்து வாங்காதே !



புல்டோஸரைவிட்டு விலகி ஓடினான் ஸ்பைடர்.
சீண்டி விளையாடியது போதுமென்று நினைக்கிறேன்.. லாசர் கதிர்களை உன் மீது பாய்ச்சப் போகிறேன்.. விளைவு -உனக்கே தெரியும்.



மரணம் உறுதியாகிவிட்ட இந்த வேளையில் உன் கோழைத்தனம் நிதரிசனமாக வெளிப்பட்டுவிட்டது...
வேண்டாம்... வேண்டாம் என்மீது லாசர் கதிர்களை பாய்ச்சாதே!



அடச்சே!
அவன் சந்தேகிக்காத
எண்ணம் கைகளை இப்படி உயர்த்தி
கைக்கடிகாரத்திலுள்ள பட்டனை
அழுத்த, பயந்தவன் போல்
நடிக்க வேண்டியதாகி
விட்டது!
பல மைல்களுக்கு அப்பால் ஒரு
பாதாள அறையின் கதவு அதை
மூடி மறைத்து குவிந்து கிடந்த
கழிவுப் பொருட்கள் நாலாதிசைகளிலும்
சிதறியோட சடக்கென திறந்து
கொண்டது.


திறந்து கொண்ட கதவுக்கு
கீழேயிருந்து வெளிப்பட்ட சில
'இயந்திர - சிலந்திகள்' ஒலியை
மிஞ்சிய வேகத்தில் விரைந்தன.



ஓரிரு கணங்களுக்குப் பின்-
என்னை அழிக்க முயற்சிக்கும் இவனுடைய கணக்கை முடியுங்கள்... ஊம்.. சீக்கிரம்!



இதற்கிடையே முடக்கு வாயுவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட புரபஸர் பெல்ஹாமும், ராய் ஆர்டினியும் கீழே நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.
'இயந்திரச்- சிலந்திகள் தங்கள் இரையைச் சுற்றி வட்டமடிக்கின்றன.. அவன் தப்புவது இயலாத காரியம் !
வலிய வந்து வம்பு செய்தவனுக்கு சரியான பாடம்தான்!



மினி-ஸ்பைடர்', நடத்தும் உயிர் போராட்டத்தை கண்டு களித்துக் கொண்டிருந்த அசல் ஸ்பைடர் ஆக்ரோஷமாகக் கத்தினான்.
விடாதீர்கள் ! ஒழித்து விடுங்கள் !
இதற்கிடையே -
ஓ.. நம்மை போலீஸார் வளைத்துக் கொண்டுவிட்டார்கள்.. புரபஸர் !
சரணடைந்து விடுங்கள்... இல்லையேல் சுட வேண்டி வரும்.



அவர்களை எடுத்துக் கொண்டு விரைந்து செல்லுங்கள் !
ஹாஹ்.. ஹா ! இன்ஸ்பெக்டர் ஸார்... சென்று வருகிறோம் வீட்டுக்குப் போய் கடுதாசி போடுகிறோம் !


நீண்ட நேர இடைவேளைக்கும் பின்னர் ஸில்லாஸின் பாசறையில்..
உனக்கு இன்னொரு வாய்ப்பு தர முடிவு செய்துள்ளேன் ஜிம்மி !
ராட்சஸ உருவில் நான் சாதிக்கத் தவறியதை இம்முறை நிச்சயம் சாதித்துக் காட்டுவேன்


என்மீது நம்பிக்கை கொண்டிருக்கும் உங்களுக்கு நன்றி !
இந்தா இந்த கையுறைகளை மாட்டிக் கொள் !



ஜிம்மி கையுறைகளை வாங்கி அணிந்து கொண்டதும்..
இந்த இயந்திர பொம்மை இப்போது உன் எலும்புகளை அப்பளமாக நொறுக்க வருகிறது, முதலில் கைகளை தட்டிக் கொண்டு பிறகு மோதத் தொடங்கு!
அதை தடுத்து நிறுத்த கைகளைத் தட்டினால் மட்டும் போதுமா என்ன ?


அட நான் தொட்டதும் பொல பொல வென்று உதிர்ந்து விட்டதே !
அது அந்த கையுறைகளின் மகிமை... கைகளை நீ தட்டியதும் உன் வீரியம் பல நூறு மடங்காகி விடும்.. இரண்டாவது முறை தட்டினால் பழைய நிலைக்கு திரும்பிவிடுவாய்
இனி ஜிம்மியை வெல்ல யாராலும் முடியாது !


என்னைத் தவிர !
ஹா... ஸ்பைடர் ! ஜிம்மி... உன் கைவரிசையை இப்போது அவனிடம் காட்டு !
தாமதியாதே.. உடனே அவனே அழிக்க முயற்சி செய் ஜிம்மி !
விசேட கையுறையின் மகிமையால் சுலபமாக இவனுடைய கதையை முடித்துவிடுவேன் !


இவன்..? ஸ்பைடரல்ல - வேரெருு பொடியன் !
என் பெயர் "மினி-ஸ்பைடர் !" என்-சக்தி அந்த ஸ்பைடருக்கு நிகரானது ! - ஏன் ஒப்பற்றது !
சோதித்துப் பார்த்துவிடுவோம்.. இந்த கையுறைகள் உன்மீது பட்டதும்..
என்னைப்பற்றி மிக மிக தாழ்வாக மதிப்பீடு செய்து விட்ட உன் மதியீனத்துக்கு இந்தா பரிசு !



இப்படி வலை இழைகளால் கட்டி இழுத்து ஒரு சுழற்று சுழற்றினால் அது ரொம்ப சுகமான அனுபவம்தான் இல்லையா ?
ஈஈ யீ.. ப்பீ
அந்த தூணைத் தொட்டு விடாதே... போசசு.. போச்சு !
மடையா.. நான் எச்சரித்தும் இப்படி பண்ணிவிட்டாயே !




இளைஞனுக்கு உற்சாகம் கிளம்பி விட்டது.. இன்னொரு தூணை நாக்கி ஜிம்மியை சுழற்றினான்.
வேடிக்கை பிரமாதம்..! இப்படியே இன்னும் கொஞ்ச நேரம் தொடருவோமா?
ஐயையோ ! கட்டிடத்தின் மேற்கூரை ஆட்டம் கண்டு விட்டது ! இன்னும் ஒரு தூண் இப்படி நொறுங்கிப் போனால் கூரை விழுந்து நசுங்கி செத்துப் போவது உறுதி.. அடேய் அறிவுகெட்டவனே.. மீண்டும் கைகளை தட்டு !
98


7


கையுறைகளின் விசேட சக்தியை செயலிழக்கச் செய்ய அது ஒன்று தான் வழி.


இதோ.. தட்டிவிட்டேன் ! இனி அசம்பாவிதம் நிகழாதல்லவா !
வாயை மூடு சனியனே மற்றவர்கள் ஏன் பித்துப்பிடித்தாற். போல் நின்றுகொண்டிருக்கிறீர்கள். பேயாட்டம் போடுவதில் ஸ்பைடருக்கு இவன் எவ்விதத் திலும் சளைத்தவனாகத் தெரியவில்லை... சுட்டுத் தள்ளுங்கள்!


என்ன ! துப்பாக்கி குண்டுகள் அவனை துளைக்கக் காணோமே !
குண்டுகள் துளைக்கமுடியாத என் கவச உடுப்புகளுக்கு நன்றி ! ஹோ . ஹோ.. இவர்களுடைய அப்பாவித்தனத்தை நினைத்தால் எனக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வருகிறது !
சட்டென்று ஜிம்மியை வலைத் துப்பாக்கியோடு இணைத்திருந்த இழையை அறுத்தான் இளைஞன்.
ஒன்றும் பிரயோஜனமில்லாத உதவாக்கரைகளோடு போய் நீயும் சேர்ந்து கொள் !


நீண்டதொரு துப்பாக்கியை உருவி எடுத்த இளைஞன் அங்கிருந்தோர் அனைவரையும் மடக்கிப் போட்டான்.
அசைந்தீர்களோ உங்கள் கூட்டம் மொத்தமும் அழிந்துபோகும் - எச்சரிக்கை !
ஒரு சாதாரண இளைஞன் அறிவியல் மேதையான என்னையும் - வலிமை மிக்க என் கூட்டத்தாரையும் மண்டியிடச் செய்வதா.. வெட்கக்கேடு.. !


நான் உங்களோடு ஒரு பேரம் பேசவே இங்கு வந்தேன். முதலில் என் திறமையை நிரூபித்துக் காட்டினாலன்றி நீங்கள் என் கோரிக்கைக்கு செவி சாய்க்க மாட்டீர்கள் என்பதால்தான் இந்த விளையாட்டு விளையாடினேன் !


அந்த போரத்தில் எங்களுக்கு என்ன லாபம் கிடைக்கும் ?
நம்முடைய முயற்சியில் கிடைக்கவிருக்கும் பெரும் செல்வம் அல்லது ஆதிக்கம் இவற்றின்மீது எனக்கு நாட்டமில்லை.. நீங்களே சொந்தமாக்கிக் கொள்ளலாம். என் குறிக்கோள் - ஸ்பைடரை தீர்த்துக் கட்ட வேண்டும் அதற்கு எனக்கு நீங்கள் உதவவேண்டும்.

முதலில் எனக்கு ஒரு விஷயம் தெரிந்தாக வேண்டும.. ஸ்பைடரை நீ இந்த அளவுக்கு வெறுக்கக் காரணம் என்ன ?
ஓ.. அதை தெரிந்து கொள்வதன் மூலம் என்னை நீங்கள் சரிவர புரிந்துகொள்ள முடியும் - இல்லையா! இதுவரை யாருடனும் நான் பகிர்ந்து கொள்ளாத பரம இரகசியத்தை இப்போது நான் வெளியிடப் போகிறேன்.


என் தந்தை தன் அந்தரங்கத்தை யாருடனும் பகிர்ந்து கொண்டதே யில்லை.. என் தாயார் இறந்ததும் என்னை ஒரு ராணுவ ஸ்கூலில் கொண்டு போய சேர்த்தார்.. பார்வையாளர்கள் வந்துபோகும் தினங்களில் மட்டுமே அவரை நான் சந்திக்கமுடிந்தது.
எங்களுடைய பயிற்சி வகுப்புகளை பார்த்தீர்களல்லவா -?
பிரமாதமாய்ச் செய்கிறாய் ராபின் ! எதிர்காலத்தில் என்னுடைய இடத்தை இட்டு நிரப்ப தேவையான ஆற்றல் உன்னிடம் நிறையவே இருக்கிறது.
உங்களுடைய இடத்தை இட்டு நிரப்பவா ? - உங்களுடைய வழி எனக்கு ஒத்து வராது அப்பா.. எதிர் காலத்தில் நாட்டைக் காக்கும் இராணுவ வீரனாகவோ சமூக விரோதிகளை தேடிப் பிடித்து ஒழிக்கும் அரசாங்க உளவாளியாகவோ வரவே நான் ஆசைப்படுகிறேன்.. ஆனால் நான் உங்களுடைய மகன் என்ற உண்மை வெளியானால் அந்த வாய்ப்புகள் எனக்கு மறுக்கப்படக்கூடும்.


என்னை மகிழ்விக்க நீங்கள் விரும்பினால் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதை உடனே விட்டொழியுங்கள். கொள்ளையடித்துச் சேர்த்த சொத்துக்களை திரும்ப ஒப்படைத்து விட்டு, கிடைக்கும் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு திருந்திய நபராக வெளி வர வேண்டும்.
பிழைக்கத் தெரியாத பிள்ளையாக இருக்கிறாயே நீ.. ஹூம் எல்லாம் போகப் போக சரியாகிவிடும்.. கவனமாகப் படி - மற்றவைகளை பிறகு பார்த்துக் கொள்ளலாம்.
ஆனால்... படிப்பு முடிந்து நான் வெளியேற வேண்டிய தினத்துக்கு முதல் நாள் ஸ்பைடர் என் தந்தையை கொலை செய்துவிட்ட செய்தியை பத்திரிக்கையில் படித்தேன். பழிக்குப் பழி வாங்க
ஸ்பைடரை கொல்வதென அக்கணமே சபதம் எடுத்துக் கொண்டேன்... என் சப்தத்தை நிறைவேற்ற உங்கள் துணையை நாடி இங்கே வந்திருக்கிறேன்.
நல்லவேளை.. இவனுடைய தந்தையை கொலை செய்தது ஸ்பைடரல்ல – நான் தான் என்ற உண்மை இவனுக்கு தெரியவில்லை.
சபதம் எடுத்துக் கொண்டதும் அடுத்து நீ என்ன செய்தாய்?


எரிமலையாய் குமுறும் நெஞ்சோடு பள்ளியை விட்டு வெளியேறினேன்.
என் தந்தை ஒரு சமூகவிரோதி என்ற போதிலும் நானொரு நேர்மையாளனாக வாழவே இதுவரை தீர்மானித்திருந்தேன். ஆனால் இன்றோ - என் தந்தையை கொன்ற ஸ்பைடரை கொன்று வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டிய கடமை வந்து சேர்ந்திருக்கிறது.
தந்தை என்றாவது திருந்திவிடுவார் என்று நம்பினேன் நானொரு போலீஸ் அதிகாரியாகவோ உளவாளியாகவோ பணியாற்றி சமூகத்துக்கு துணை நின்று அவருடைய பாவத்துக்கு பிராயச்சித்தம் தேட எண்ணினேன் இப்போது – அனைத்தும் கனவாகிப் போயிற்று.. எல்லாம் அந்த கயவன் ஸ்பைடரால் கெட்டுப் போயிற்று. அவனை –



ஸ்பைடரை சுலபத்தில் தீர்த்துக்கட்ட முடியாது என்ற உண்மையை அறிந்திருந்த நான் அதற்கு என்னை தகுதியானவனாக்கிக் கொள்ள தேவையான பல கடுத்தமான பயிற்சிகளை மேற்கொண்டேன்.
இவ்விடத்தில் நீருக்கு அடியில் ஸ்பைடருக்கு ஒரு மறைவிடம் இருக்கிறது என்பதாக நான் கேள்விப்பட்ட செய்தி உண்மை யானதாக இருக்குமேயானால் நான் அதிர்ஷ்டசாலிதான்!
நான் அதிர்ஷ்டசாலிதான் என்பது விரைவிலேயே உறுதியாகிவிட்டது-
ஸ்பைடரின் மாற்று கவச உடுப்புகளும் மற்ற விசேட அமைப் புகளும் ஒரு சேர எனக்கு கிடைத்து விட்டது.. ஜெட் அமைப்பையும் பொருத்திக் கொண்டு துப்பாக்கி களையும் கைகளில் எடுத்துக் கொண்டேனேயானால் ஸ்பைடருக்கு சமமான வலிமை பெற்றவனாகிவிடுவேன்.



ஜெட் அமைப்பை சரியாக பயன் படுத்த தெரியவில்லை.. நிறைய பயிற்சி எடுத்துக்கொண்டு பிறகு தான். ஸ்பைடரோடு மோதவேண்டும்.
ராபின் தன்கதையை தொடர்ந்து சுருக்கமாக சொல்லி முடித்தான்.
கேட்க ரொம்ப சுவராஸ்யமாக இருக்கிறது உன் சரிதம்.. மேலே சொல் கேட்போம் !
ஸ்பைடருக்கு சமமான திறமையை பெற தீவிரமான பயிற்சிகளை மேற் கொண்டேன் ஸ்பைடரோடு மோதி அவனை கொன்று தீர்க்குமுன் அவனை சித்திரவதை' செய்து என் சினத்தை ஆற்றிக்கொள்வேன்.


108
ஸ்பைடரை அழிப்பது நம் இருவரின் பொதுப் பணியாக இருக்கட்டும்.. என் தந்தையை கொன்றவனை வஞ்சம் தீர்த்துக் கொண்ட திருப்தி எனக்கு மிஞ்சும்.. உங்களுக்கும் தொழில்முறை விரோதி ஒழிந்து போனால் லாபம்தானே !
உன் விருப்பப்படியே செய்ய சம்மதிக்கிறேன் !
உன்னை பயன்படுத்தி ஸ்பைடர் சனியனை ஒழித்துக்கட்டி விட்டு பிறகு உன் தந்தையைக் கொன்றவன் நான்தான் என்ற உண்மையை நீ அறியுமுன் உன் கதையை முடித்தாகவேண்டும்.


அதே நேரம் அங்கே ஸ்பைடரின் இருப்பிடத்தில் -
யாரோ எதிரிகள் எனக்கெதிராக பெரியதொரு சதிச் செயலில் ஈடுபட்டு வருவதாக என் உள்ளுணர்வு கூறுகிறது.
மறுபடியும் பயணமா ?
வெளியே கிளம்பவேண்டும் என்ருல் ஏன்தான இப்படி பயந்து சாகிறேயோ தெரியவில்லை ஆர்டினி !
ஸில்வானஸின் பாசறையில் -
பேச்சு போர்தும்.. இனி செயலில் இறங்குவோம். எனககு ஸ்பைடரின இருபபிடம் தெரியும்,. அங்கே சென்று நேருக்கு நேர் மோதி ஸ்பைடர் குழுவை அழிப்போம்.
ஸ்பைடரின் இருப்பிடத்தைப் பற்றி சரியான விபரங்களை மட்டும் என்னிடம் கூறு.. மற்றவைகளை நான் கவனித்துக் கொள்கிறேன்


ராபின் தகவல்களை வெளியிட்டதும்..
ஹீ..ஹீ.. இந்த வெப்பக் கதிர் ராக்கட்டை முடுக்கிவிட்டால் மறுகிமிடம் ஸ்பைடரின் கோட்டை தான் தூள்.. ஸ்பைடர் குழு மொத்தமும் அழிந்துபோகும்.
கூடாது.. அது ஈனத்தனமான கொலைச் செயலாகும்.. நேருக்கு நேர் மோதி போரிட்டு வெல்வதையே நான் விரும்புகிறேன்.


ஆலோசனை எப்போதுமே தேவைப்பட்டதில்லை தோழனே.. எப்போது இங்கே வந்துவிட்டாயோ பிறகு அனைத்தையும் அவர் பொறுப்பில் விட்டுவிடுவதுதான் புத்திசாலிக்கு அழகு.
ஹா. ஹா.. இதோ முதல் ராக்கட் கிளம்பி விட்டது.. இரண்டாவது - மூன்றாவது.. நடக்கப் போவதை டி. வி. திரையில் கண்டுகளிக்கவும் வசதியுண்டு.


ஹா.. ஹா.. ஸ்பைடரின் கோட்டை அழிந்தது.. !
ஸ்பைடர் சகாப்தம் முடிந்தது.. இனி நம்மை தட்டிக் கேட்க ஆளில்லை!
ஈனத்தனமான செயல.. நேரடி மோதலையே நான் விரும்பினேன்.


அவனது சகாககளும
பிணமாகிக் கிடப்பதைப் பார்..
உன் வஞ்சகம் தீர்ந்ததல்லவா..
என்பரம எதிரியை அழிக்க உதவிய
உனக்கு என் நன்றி..
எனக்கு.. இதில்
சம்மதமே இல்லே.
ஒன்றும் புரியவில்லேயே.. நான்
அனுப்பிய ராக்கட்டுகள் திரும்பி
வருவதாக காட்டுகிறதே இந்த
முள்.. ஸ்பைடரின் கோட்டையை
தகர்த்தபோது அவை வெடித்துச்
சிதறியதாக டி. வி. யில்
பார்த்தேனே..
மிரட்சியடைந்த ஸில்வானஸ்
இன்னொரு விசையை இழுத்தான்...
டமால்!
நல்லவேளே திரும்பி வந்து
கொணடிருந்த ராககட்டுகள
நம் இருப்பிடத்தை தொடுமுன்
வெடிக்கச் செய்துவிட்டேன்..
இல்லேயேல் இந்நேரம் நாம்
அனேவரும் எமலோகம்
போயிருப்போம்.


மறுகணம் -
நம்பமுடியவில்லையே ! ஸ்பைடரின் கோட்டை ஒரு சேதமும் இன்றி முன்போலவே காட்சியளிக்கிறதே !
ஸ்பைடரும் சாகவில்லை...
ஹலோ முண்டங்களா ! என்னுடைய கோட்டை அழிந்து போனதாக நீங்கள் கண்ட காட்சி என்னால் உருவாக்கப்பட்ட பிரமைத் தோற்றமே.. ராக்கெட்டுகளை திருப்பியனுப்பியதும் என் கைங்கரியமே..


ச்சு.. மீண்டும் இலக்கு வைத்து ராக்கட்டுகளை அனுப்ப இயலாதபடி ஸ்பைடர் தன் கோட்டையை சுற்றிலும் கரும் மேகத்திரள் சூழச் செய்து விட்டான்.. ஆனாலும் என்ன - செங்கதிர் அலைகளை எழுப்பி அனைத்தையும் தெளிவாக காண வசதியிருக்கிறது என்னிடம்.
இப்பொழுது நான் அனுப்புகின்ற வெறுப்பலை ராக்கெட்டுகள் உங்கள் அனைவரையும் காட்டு மிராண்டிகளாக மாற்றப் போகிறது! ஹோ! ஹோ! ஹோ!
ஸ்பைடரிடமிருந்து எதிரிக்கு - உன் திட்டத்தை உளறிக் கொட்டிய உன் ஓட்டை வாய்க்கு நன்றி. செங்கதிர் அலைகளை எழுப்பும் முன் இங்கிருந்து என் தாக்குதலை துவங்குகிறேன் !
அடி!
உதை!


ஸ்பைடரின் ராக்கட்டுகளின் பலனாக -
ஐயோ.. என்னுடைய அரிய கண்டுபிடிப்புகள் அநியாயமாக நொறுங்கிப் போய் விட்டனவே..!
வெட்கக் கேடு..
இதற்கெல்லாம் காரணமான ஸ்பைடரை பழிவாங்காமல் விடமாட்டேன்.. ஸ்பைடரைப்போல் தோற்றமளிக்கும் அந்த இளைஞனை பிடித்து வாயுக் கோளத்திலுள் அடையுங்கள்.
சக்தியலைகள் பாயத் தொடங்கிவிட்டன.


மினி - ஸ்பைடர் நமக்கு தொழில் முறையில் மிக உதவியாக இருப்பானே.. அவனை ஏன் இந்த ஆபத்தான முயற்சியில் பலி கொடுக்க தீர்மானித்தீர்களோ புரியவில்லை.
எல்லாம் எனக்குத் தெரியும். பேசாமலிரு தடியா !



ஏறத்தாழ முழுவதும் மறைந்து விட்டது அவனுடைய உருவம் திரையை கவனியுங்கள் நொடிப் பொழுதில் மினி - ஸ்பைடர் உலகின் மறுகோடியை அடைந்துவிட்ட உண்மை புரியும்.
என் எதிரிகள் இருவரும் ஒருவரோடு ஒருவர் போரிட்டு மடிய நான் தேர்ந்தெடுத்திருக்கும் களம் ஒரு புராதன கால நகரம் - பெயர்.. ராம்தராஸ்!


இடிபாடுகளுக்குகிடையே -
நான் எங்கே-இருக்கிறேன்?
ஸில்வானஸ் பேசுகிறேன் - நம்ப முடியாத ஆற்றல் கொண்ட வாயுக் கோளம் கண்ணிமைக்கும் நேரத்தில் பல்லாயிர மைல்களுக்கு அப்பால் உன்னை எடுத்துச் சென்று பழைய நகரமான ராம்த்ராஸில் விட்டுள்ளது.
ஸ்பைடர் இங்கே உன்னைத் தேடி வருவான்.. நீ உன் விருப்பப் படியே நேரடியாக மோதி அவனை அழிக்க இது நம் ஒப்பந்தப்படி உனக்கு நான் வழங்கியுள்ள அரிய வாய்ப்பு.
ஏமாற்று வேலை.. !


என்னை பகடைக் காயாக நீ பயன்படுத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன்!
நன்றியில்லாத மூடனே உன் தந்தையை கொலை செய்தவனை நீ பழி தீர்க்க வேண்டாமா.. அவன் உன் எதிரே தோன்றியதும் பாரேன் என் கைவரிசையை !
அத்தோடு சுவிட்சை அணைத்த ஸில்வானஸ் பெரிதாக சிரிக்கத் தொடங்கினான்...
ஹா.. ஹா.· நல்ல தமாஷ் ! ஹா,. ஹா. ஹோ ! ஹோ !
விஷயம் என்ன என்று தெரிந்தால் நாங்களும் சிரிப்பில் கலந்து கொள்வோமே !
இந்த விஷயத்தில் தமாஷ் என்ன இருக்க முடியும் ?



கொன்றவனை பழி தீர்க்க எனக்கு உதவுங்கள் என்று அந்தக் கொலையைச் செய்த என்னிடமே உதவி கோரி ஒருவன் வந்தால் சிரிக்காமல் எப்படி இருப்பது. ஹா.. ஹா... ஹா!
நல்ல வேடிக்கை.. ஹா ஹா.. சரியான கில்லாடி பாஸ் நீங்கள்.
அப்பனையும் சரி, மகனையும் சரி தொலைத்து விட்டீர்கள்!
ஸில்வானஸ் எதிர்பார்த்தபடியே ஸ்பைடர் ராபினை தேடியலைந்து கொண்டிருந்தான்.
அவன் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் தேடிக்கண்டு பிடித்து அவன் டோப்ஸை கொன்று விட்டு பழியை என் மீது போட்டு பித்தலாட்டம் செய்ய காரணம் என்ன என்று கேட்டறியவேண்டும்.


ஹெலிகார் தரையிறங்கியதும் -
ஹே.. அகப்பட்டுக் கொண்டு விட்டாயா என்னிடம் - பேசாமல் சரணடைந்து விடு !
ஓ.. என் எதிரி !



சட்டென்று இருவரும் உஷாரானார்கள்.
இந்த துப்பாக்கிகள் உனக்குச் சொந்தமானவைதான் - இவற்றின் செயல்திறனை நீ அறிவாயல்லவா !
தற்காப்புக்காவது உன்னோடு போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது இப்போது !


மேலெழும்பினான் "மினி-ஸ்பைடர்"
இந்த உதை எப்படியிருக்கு ?
துள்ளுகிறாய் நீ.. இத்தோடு நிறுத்திக் கொண்டால் மன்னித்து விடுகிறேன்.. மிஞ்சினாயோ - அழிவு உறுதி.. எச்சரிக்கிறேன் !
தள்ளாடிய ஸ்பைடர் நிலை கொள்ள கையிலகப்பட்டதை பற்றியபோது "மினி - ஸ்பைடரை" அங்கே இட்டு வந்த வாயுக் கோளத்திலிருந்த இயந்திரம் இயக்கம் பெற்று டி. வி. திரையில் காட்சி தோன்றலாயிற்று.
டோப்லைப் போலவே அவனுடைய மகன் ராபினும் சரியான கிறுக்கனாக இருப்பான் போலிருக்கிறது.. "மினி - ஸ்பைடராம்" அவன். ஏதேதோ பிதற்றிக்கொண்டு அலைகிறான்.
வில்வாளனல்லவா இது. ?


பொறு இதைக் கவனி - ரொம்ப சுவரஸ்யமான விஷயம் என்று தோன்றுகிறது.
தான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் பிறிதோரிடத்தில் ஒலிப்பரப்பாகிக் கொண்டிருக்கிற உண்மையை அறியாத ஸில்வானஸ் முட்டாள்தனமாக இரகசியங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தான்.
டோப்ஸை கொலை செய்த நான் பழியை ஸ்பைடர் மீது போட வலை இழைகளை காரின் மீது பின்னி வைத்தேன்.. தந்தையை கொலை செய்த நபரை தீர்த்துக்கட்ட் நான் உதவுவதாகச் சொல்லி டோப்ஸின் மகனை ஏமாற்றி எனக்கு பணியாளாக்கிக் கொண்டேன்.
அற்புதமான மூளை உங்களுக்கு !
எத்தனை முட்டாளாக இருந்திருக்கிறேன் இதுவரை..



உன் தந்தையின் மரணத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை புரிந்து கொண்டாயல்லவா!
புரிகிறது..! இக்கணம் முதல் நாம் இருவரும் சேர்ந்து ஸில்வானை வேட்டையாடலாம் உங்களுக்கு சம்மதம்தானே !
தற்பெருமை பேசிக்கொண்டிருந்த ஸில்வானஸ் தனக்கு அருகேயிருந்த டி. வி. திரையை கவனிக்கத் தவறிவிட்டான்.
பாஸ்... மோசம் போனோம்! நீங்கள் பேசியதை ராபின் எப்படியோ கேட்டுவிட்டான் என்று தோன்றுகிறது. ஸ்பைடரும் அவனும் சேர்ந்து கொண்டு உங்களுக்கு எதிராக கிளம்பி விட்டார்கள்....
இக்கணம் முதல் நாம் இருவரும் சேர்ந்து ஸில்வானை வேட்டையாடலாம் ...
என்ன உளறுகிறாய் ?
124


இரண்டு வினாடிகளுக்குப் பின் ஸ்பைடர் ஓடி வந்து லோரியோடு சேர்ந்து கொண்டான்.
இதன் இயக்கத்தை மாற்றியமைத்து விட்டேன் ... விந்தை நிகழப்போகிறது பாரேன் ...
உங்களுடைய அறிவாற்றலுக்கு நிகரே கிடையாது


திடீரென்று தங்கள் எதிரே தோன்றிய ஸ்பைடர்களின் மங்கலான உருவம் வர வர தெளிவாகிக் கொண்டே வருவதைக் கண்டு மிரண்டு போயினர் ஸில்வானஸும் அவனது சகாக்களும்...
எப்படி இங்கே வந்து சேர்ந்தார்களோ விளங்கவில்லையே!
ஸ்பைடர் என்னையும் மிஞ்சிவிட்டான்



ஸ்பைடரை அழிக்க ஒருவன் இனிமேல் பிறந்துவந்தால்தான் உண்டு—புரிந்து கொள்!
உப்!
வாங்கிக்கொள் இதை!
ஐயோ!
ஒரு மணி நேர இடைவேளைக்குப்பின் - தன்வீட்டு காலிங் பெல்லை யாரோ அடிப்பதைக் கேட்டு வாசலுக்கு வந்தார் போலீஸ் அதிகாரி சாண்டர்ஸன்.
டோப்ஸை கொலை செய்த ஸில்வானையும் அவனுடைய சகாவையும் என் பரிசு பொருட்களாக ஏற்றுக் கொள்ளுங்கள் - என் கூற்றுக்கு இந்த வீடியோ டேப் சாட்சி சொல்லும்.
டோப்ஸின் மகன் நான் - பெயர் ராபின் ...
திடீரென்று இப்படி ...? ஒரேயடியாக தலையைச் சுற்றுகிறது எனக்கு!
முற்றும்.